பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 14 | புதன்கிழமை | 31.12.2025 | அதிர்வு 153

## ஜோன்ஸ்டனின் மகன் கைது!



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண் டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ 06

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஜனவரி 3ஆம் திகதியும் போராட்டம்!

## காணிகளை இழந்த மக்கள் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“தையிட்டியில் எமது காணிகளில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையில் மீண்டும் புத்தர் சிலை வைக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி போராட்டம் நடைபெறும். இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.”

– இவ்வாறு திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்தவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஊடக 07




# திஸ்ஸ விகாரை சட்டவிரோதம் என்று அரசு குழு தீர்ப்பளித்தால் ஏற்கத் தயார்

## அங்கு புதிய கட்டுமானம் எதுவும் நடைபெறாது என்றும் விகாராதிபதி நந்தாராம தேரர் உறுதி




(எஸ்.நிதர்ஷன்)

“தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் மக்களுக்குச் சொந்தமானவை. அங்கு விகாரை அமைக்கப்பட்டது சட்டவிரோதம் என்று அரசு அமைத்துள்ள விசாரணைக் குழு தீர்ப்பளித்தால் அதனை ஏற்கத் தயார்.”

- இவ்வாறு தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரர் தெரிவித்தார். 07

# சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டிய ஒருவரே டக்ளஸ்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு



“ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வெறும் ஆயுத மோசடியோடு மாத்திரம் தொடர்புபட்ட சாதாரண குற்றவாளி கிடையாது. அரச இயந்திரத்தோடு சேர்ந்து ஒட்டுக்குழுவாக இயங்கி, தமிழர்களுக்கு எதிரான பல நூற்றுக்கணக்கான கொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் காணாமல் ஆக்கப்படுத்தலுக்கும் வன்புணர்வுகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய இலங்கையின் ஆகப் பெருங்குற்றவாளிகளில் முதன்மையானவராவார். அவர் சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டிய ஒருவர்.” 06




யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக யாழ் மாவட்ட நீதிமன்றம் தான் வழங்கிய கட்டாணையை இரு வாரங்களின் முடிவில், புதிய வாதங்கள் எதனையும் உள் வாங்காமல், ஒருதலைப் பட்சமாக அந்த கட்டாணையை முடிவுறுத்தி அதே மாவட்ட நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு எதிராக, வடக்கு மாகாண மேன் முறையீடுகளுக்கான மேல் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரே மனுதாரரினால் மீளாய்வு மனுவும், மேன்முறையீட்டு மனுவும் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றைத் தைப்பொங்கல் முடிந்த கையோடு வரும் 16ஆம் திகதி மன்றில் எடுக்குமாறு மனுதாரர் மன்றைக் கோரி இருக்கிறார்.

மேற்படி தடுப்புக் கட்டாணையை முதலில் வழங்கிய மாவட்ட நீதிபதி, புதிய வாதங்கள் எதையும் செவிமடுக்காமல், 06



# கல்லுமலையும் வெடுக்குநாறியும் எங்கள் சொத்து; பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்துங்கள்!

## வவுனியாவில் நேற்றுப் போராட்டம்

(கி.வசந்தன்)

"கல்லுமலையும் வெடுக்குநாறியும் எங்கள் சொத்து. பௌத்தமயமாக்கலை நிறுத்துங்கள்!" எனத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டியில் ஜனநாயக ரீதியாக போராடியவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், வவுனியா உட்பட வடக்கு கிழக்கில் புதிதாக அமைக்கப்படும் விகாரைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் –

சட்டவிரோதமாக தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடியவர்கள் மிலேச்சத்தனமாக கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மதகுரு என்று கூட பாராமல் மோசமான முறையில் வேலன் சுவாமி நடாத்தப்பட்டிருந்தார். இது தமிழ் மக்கள் மீதான ஓர் அடக்குமுறைச் செயற்பாடாகவே உள்ளது.

வடக்கில் குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, தையிட்டி, தற்போது வவுனியா கல்லுமலை என்பன ஆக்கிரமிப்பு செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளன. பௌத்த துறவிகளே இப்படியான கலவரங்கள் ஏற்படுவதற்கு தூண்டுகோலாக உள்ளனர். எனவே மறுக்கப்படும் எமது உரிமைகளை அடைவதற்காக நாம் தொடர்ச்சியாக போராட்டங்களை செய்வோம். – என்றனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிய பதாதைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.




















# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மகளிர்அணியின் தெரிவு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மகளிர் அணியின் நிர்வாகத்தெரிவு நேற்று இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் இடம்பெற்ற இந்தத் தெரிவுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் வவுனியா மாவட்டக்கிளை தலைவருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம், மாவட்ட உபதலைவர் பாலச்சந்திரன் சிந்துஜன், செயலாளர் ந.கருணாநிதி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கட்சியின் வவுனியா மாவட்ட மகளிர் அணியின் தலைவியாக பிரதேசசபை உறுப்பினர் திருமதி.தர்சினி கேதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக பிரதேசசபை உறுப்பினர் திருமதி.பத்திமா கெபிரியேல் தெரிவானார்.

பொருளாளராக மாநகரசபை உறுப்பினர் திருமதி.யோகேஸ்வரியும் உபதலைவியாக பிரதேசசபை உறுப்பினர் திருமதி.சரோஜாதேவியும் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.








# மொட்டுக் கட்சி உடன் கொல்லும் விஷம் திசைகாட்டி மெல்லக் கொல்லும் விஷம்

## முஸ்லிம்களின் நிலைப்பாடு அதுவே என்கிறார் இம்ரான் எம்.பி.

(ஏ.எச்.ஹஸ்பர்)

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை மொட்டு அரசாங்கம் உடன் கொல்லும் விஷம் என்றால், திசைகாட்டி அரசாங்கம் மெல்லக் கொல்லும் விஷமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான மொட்டு அரசாங்கக் காலத்தில் முஸ்லிம்கள் நேரடியாக குறிவைத்துத் தாக்கப்பட்டனர். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலையிலான திசைகாட்டி ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் மெல்ல மெல்ல குறிவைக்கப்படுகிறார்கள். இதனை இந்நாட்டு முஸ்லிம்கள் கவனத்தில் எடுத்துச் சிந்திக்க வேண்டும்.

கோட்டாபய நமக்குச் செய்த அநியாயங்களை நாம் இன்னும் மறக்கவில்லை. அவை நம்மை நேரடியாகக் குறிவைத்துச் செய்யப்பட்டவையாகும்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான திசை காட்டி அரசாங்கம் நம்மை மெல்ல மெல்லத் தாக்கி வருகின்றது.



இலங்கையில் இதற்கு முந்திய சகல அமைச்சரவையிலும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது. இந்த அரசாங்கம் வந்தவுடனேயே அதனை இல்லாமல் செய்தது. அதுபோல இந்த ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்ட குழுக்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டது.

தற்போது முஸ்லிம் கலாசாரத் திணைக்கள கட்டடத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை ஜித்தா கௌன்ஸலர் பதவியிலிருந்து முஸ்லிம் பிரதித்துவம் அகற்றப்படவுள்ளது.

ஏன் இந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கு இப்படி அநீதிகளை செய்து வருகின்றது என்று பல சமூக ஆர்வலர்கள் என்னோடு கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர்.

இந்தச் செயற்பாடுகளின் விளைவுகள் எதிர்காலத்தில் நமது சமூகத்திற்குப் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும். இதனை நியாயமாக சிந்தனையில் எடுத்துப் பார்ப்போர் இதன் விளைவுகளைப் புரிந்து கொள்வர்.

இந்த அரசாங்கத்தின் சில செயற்பாடுகளின் பின்புலத்தில் யூதர்களின் தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்து வருகின்றது. அரசின் அண்மைய நகர்வுகள் குறித்து அவதானிக்கும் போது இந்த சந்தேகம் மேலும் வலுப்படுகிறது.

எனவே திசைகாட்டிக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம்கள் அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பது போல அநீதிகளுக்கு எதிராக அழுத்தம் கொடுத்து அவற்றைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது முடியாவிட்டால் கண்மூடித்தனமாக அரசுக்கு முட்டுக் கொடுப்பதை விட்டு, அரசுக்கு கொடுக்கும் ஆதரவை விலக்கி, அடுத்து வரும் தேர்தல்களில் அதனைப் பிரதிபலிக்க வேண்டும்.

எதிர்கால சமூகத்திற்கு நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் அரசின் இந்த நகர்வுகளுக்கு தொடர்ந்து கண்மூடித்தனமாக முட்டுக் கொடுப்போர் அதன் பின் விளைவுகள் குறித்து சிந்திக்க வேண்டும். – என்றார்.

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்று அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பு



புதிய அரசாங்கம் பல்கலைக்கழகத்தின் சட்டங்களை மாற்ற முயர்ச்சிப்பதைக் கண்டித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் நேற்று நாடு முழுவதிலும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று ஒருநாள் மாத்திரம் நடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இ.சஸ்வேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார்.

குறிப்பாக பல்கலைக்கழக பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான 1978 ஆண்டு 16 இலக்க சட்டத்தைத் திருத்தாது புதிய சட்டத்தை அரசு நாடாளுமன்றில் முன்வைத்துள்ளது என அவர் குற்றம் சாட்டினார்.

மேலும் கல்வி அமைச்சு 49, 51 சரத்துக்களை மாத்திரம் திருத்துவதாகக் குறிப்பிட்ட பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர், இதனால் பல்கலைக்கழக நடைமுறைகளில் தேவையற்ற மாற்றமும் பீடாதிபதிகளின் தெரிவில் முறைகேடுகளும் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டினர்.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் இ.கஜானந்தன், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் இ.சர்வேஸ்வர. ஆகியோர் ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்டனர்.

# முதலை கடித்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

## அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணையில் சம்பவம்



(பாறுக் ஷிஹான்)

குளத்தில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை அடையாளம் காண பெரிய நீலாவணை பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய நீலாவணை மேற்கு பகுதியிலுள்ள (விஷ்ணு ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள) குளத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை மீட்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காண்பதற்காக கல்முனை ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

முதலை கடித்த நிலையில் ஆணின் சடலமொன்று மிதந்த நிலையில் கிடப்பதாக குளத்தில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களால் பெரியநீலாவணை கிராம சேவகருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அங்கு சென்ற பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.5 அடி 6 அங்குலம் உயரம் மற்றும் சுமார் 55 வயது முதல் 60 வயது வரை மதிக்கத்தக்கவருடைய சடலத்தை பெரியநீலாவணை பொலிஸாரும் அம்பாறை தடயவியல் பிரிவு பொலிஸாரும் பொதுமக்களின் உதவியுடன் கரைக்குக் கொண்டுவந்தனர்.

இச்சடலத்தின் வலது கால் பகுதி இல்லாத நிலையிலும் முகத்தின் ஒரு பகுதி சிதைவடைந்தும் காணப்பட்டது.

சடலம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கங்களான 0718592954 அல்லது 0778911214 க்குத் தொடர்பு கொண்டு அறியத்தருமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# குருவிகல பகுதியில் வீதி மீளத் திறப்பு





(பசறை நடராஜா மலர்வேந்தன்)

பசறையிலிருந்து மடூல்சீமை ஊடாக பிட்டமாறுவ, எக்கிரிய செல்லும் வீதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீளத் திறக்கப்பட்டது.

கடந்த பத்தொன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை குருவிகல பகுதியில் வீதியில் பாரிய கல்லொன்றுடன் மண்மேடு சரிந்தமையினால் அந்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

கடந்த சில நாள்களாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் முயற்சியினால் கல் உடைக்கப்பட்டு மண்மேட்ய் அகற்றப்பட்டது. இதையடுத்து இவ்வீதியினூடான போக்குவரத்து நேற்று முன்தினம் நண்பகல் முதல் வழமைக்குத் திரும்பியது.

எனினும் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. பசறையிலிருந்து குருவிகல வரையில் பயணிக்கின்ற பஸ் சேவை கல்லுள்ள வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த தவணையில் அவை குறித்து செவிமடுப்பதற்கான வாய்ப்பு இருந்த போதும், அதற்கு இடமளிக்காமல், அதே சமயம் அந்தக் கட்டாணையை முடிவுறுத்தும் உத்தரவை வெளியிட்ட திகதியில் – நாளில் – தாம் விடுமுறையில் இருந்து கொண்டு, அந்த உத்தரவை வழங்கி இருக்கின்றார் என்ற அடிப்படையில் இந்த மீளாய்வு மனுவும் மேன்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கட்டாணையைக் கடந்த 19ஆம் திகதியிட்டு மாவட்ட நீதிபதி வழங்கியுள்ளார். ஆனால் அதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னரே அவர் தமது நியாயாதிக்க எல்லைக்குரிய பிரதேசத்திலிருந்து வெளியேறிவிட்டார் என்றும், அந்த உத்தரவு திகதியிடப்பட்ட நாளில் அவர் கடமையில் இருக்கவில்லை, வேறொரு பதில் நீதிபதி கடமையில் இருந்தார், அந்தப் பின்புலத்தில் அந்த திகதியிட்டு அவர் வழங்கிய உத்தரவு அவரது நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது என்ற அடிப்படையில் அந்த உத்தரவை நிராகரித்து உத்தரவிடுமாறு கோரி மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மனுக்களும் தைப்பொங்கலின் பின் மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது, அவற்றை முன்வைத்து சமர்ப்பணங்களைச் செய்யவிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், 'சம்பந்தப்பட்ட கட்டாணையை முடிவுறுத்தும் உத்தரவை மாவட்ட நீதிபதி திகதியிட்டு வெளியிட்ட சமயம் அவர் தமது நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இருக்கவில்லை, விடுமுறையில் வெளியில் இருந்தார், பணியில் வேறு பதில் நீதிபதி கடமையாற்றினார், ஆகையினால் அத்திகதியில் அவர் விடுத்த உத்தரவு தவறானது' என்பதை மன்றுக்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.


அவரது சமர்ப்பணத்தை வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் கொண்ட ஆயம் செவிமடுத்த பின்னர், அதனை ஏற்றுக்கொள்ளுமாயின் மேற்படி கட்டாணையை இடைநிறுத்திய மாவட்ட நீதிபதியின் உத்தரவு அல்லது நடவடிக்கை நீதிச்சேவை ஆணைக்குழுவின் பரிசீலனைக்கும் கவனத்துக்கும் எடுத்துச் செல்லப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் நேரலாம்.

வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் அதிகம் விவகாரங்களை விவரிப்பது பொருத்தமற்றது என்று விட்டுவிடுகிறேன்.

*   *   *

தேசிய கல்வி நிறுவனத்தினால் (NIE) தயாரிக்கப்பட்டு, தற்போது அச்சிடப்பட்டுள்ள, ஆறாம் ஆண்டு ஆங்கில மொழி பாடத்திற்கான ஒரு தொகுதி மொடியூல்ஸில் (Modules) பொருத்தமற்ற இணையதளமன்றின் பெயர் மூன்று இடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாடு சரியானது என்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அந்த கற்றல் தொகுதி ஆவணங்களின் விநியோகம் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து இன்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.


Here are some e-buddy profiles I found. Let's read their descriptions first.

Task 1.3 Read and find

Read the descriptions given below and complete the e-buddy profiles.

I'm Tom. I'm from England. I'm a 10-year-old boy. I like taking photographs. I read a lot. I like to eat chocolates. I'm 140 cm tall. My weight is 35kg. I can speak English and French. My ambition is to be a photographer.

My name is Fumiko. I'm 9 years old. I'm a girl. I live in Japan. I can speak Japanese and English. I can play the violin. My height is 130 cm and my weight is 32 kg. My favourite food is sushi. I want to be a businesswoman in the future.

Hello! I'm Anjalee. I'm 12 years old. I'm from India. I can speak Hindi, Tamil and Telugu. Painting and dancing are my hobbies. I'm 140 cm tall. My weight is 37 kg. I like naan. I want to be a dancer.

buddy.net
Tom Smith
Age: ............
Country: ................
Interests: ......................
Height: ..................
Weight: ..................
Favourite food item/s: .......
Ambition: ..................

buddy.net
Fumiko Tanaka
Age: ............
Country: ................
Interests: ......................
Height: ..................
Weight: ..................
Favourite food item/s: .......
Ambition: ..................

51

buddy.net
Anjalee Rana
Age: ............
Country: ................
Interests: ......................

Word bank
Photographer
Businesswoman

Find it out

அந்த வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட இணைய இணைப்பு ஓரினச் சேர்க்கையாளர்களை உள்ளடக்கிய வலைத்தளத்துக்கு இட்டுச் செல்கின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அந்த வழிகாட்டி நூலில் கூறப்பட்ட இணைய இணைப்பு முகவரியில் வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ ஓரினச் சேர்க்கையாளர்கள் ஒன்று கூடும் இணையதள முகவரி இடம் பெற்றிருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து விடயம் உறுதி செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த கற்றல் வழிகாட்டல் தொகுதியின் விநியோகம் உடனடியாக நிறுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

குற்றப்புலனாய்வுத் துறையினரின் விசாரணையின் பின்னர்தான் இந்த விடயம் தவறுதலாக நேர்ந்ததா, அல்லது இதன் சூத்திரதாரிகள் யார் என்ற விவகாரங்கள் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

## சர்வதேச யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

"டக்ளஸ் தேவானந்தா, உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் கொலைகள் உட்பட குற்றங்களைச் சாவகாசமாகச் செய்த சர்வதேசக் குற்றவாளி.

அவருக்கு எதிராக சூளைமேடு கொலை வழக்கில் இந்திய நீதிமன்றத்தின் பகிரங்கப் பிடியாணை இன்னமும் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரின் கைது வெறும் கண்துடைப்பாக மாத்திரமன்றி, அவர் ஆயுளுக்கும் வெளியே வராதபடி அமைந்தால் மட்டுமே சட்டவாட்சியின் பாற்பட்ட கைதாகக் கருதலாம்.

மாறாக ஒரு சில வாரங்களிலோ அல்லது ஒரு சில மாதங்களிலோ அவர் வெளியே வருவாரேயானால் பிள்ளையான், வியாழேந்திரன் வரிசையில் தமிழ்ப் புல்லுருவிகளைக் கைது செய்து சிறையிலடைத்துவிட்டு, அக்காலத்தினுள் அக்கட்சிகளின் அடியாட்களைத் தம்வசப்படுத்தும் ஜே.வி.பி. – என்.பி.பி. ஆட்சியாளர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் பாகமாக மட்டுமே பார்க்க முடியும். பொறுத்திருந்து பார்ப்போம்." – என்றார்.

## ஜோன்ஸ்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

லங்காசதொசநிறுவனத்துக்குச்சொந்தமான லொறி உள்ளிட்ட பல வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் ஜொஹ்னான் பெர்னாண்டோவை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# கொழும்பில் மாநகர சபையில் இன்று பலப்பரீட்சை!

## பாதீடு நிறைவேறும் என்று என்.பி.பி. அரசு நம்பிக்கை

கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இன்று புதன்கிழமை மீண்டும் முன்வைக்கப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழுள்ள கொழும்பு மாநகர சபையின் முதலாவது வரவு – செலவுத் திட்டம் கடந்த 22 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

இதன்போது வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய மேலதிக 3 வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. இது தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் ரீதியிலான பின்னடைவு எனக் கருதப்படுகின்றது.

இந்நிலையிலேயே வரவு – செலவுத் திட்டம் 2ஆவது தடவையாக இன்று முன்வைக்கப்படுகின்றது.

வாக்கெடுப்பின்போது வரவு – செலவுத் திட்டம் நிறைவேறும் எனவும், எதிரணி உறுப்பினர்கள் மனச்சாட்சியின் பிரகாரம் வாக்களிப்பார்கள் எனவும் கொழும்பு மாநகர மேயர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, வரவு – செலவுத் திட்டம் வெல்லும் என்று தேசிய மக்கள் சக்தி அரசும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## திஸ்ஸ விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், "காணிப் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம்" என்றும் அவர் உறுதியளித்தார்.

தையிட்டி திஸ்ஸ விகாரையிள் உள்ள அவரின் வசிப்பிடத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திஸ்ஸ விகாரையில் எதிர்வரும் 3ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் வழமையான பூஜை வழிபாடுகள்தான் நடைபெறும். விசேட பூஜை வழிபாடுகள் எதற்கும் விகாராதிபதியாக நான் எதற்கும் இடமளிக்கவில்லை.

தெற்கில் இருந்து புத்தர் சிலை எடுத்து வரப்படுகின்றது என்றும், அன்றைய தினம் விசேட பெரஹரா நடைபெறவுள்ளது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அவ்வாறான எதற்கும் நான் அனுமதி வழங்கவில்லை. அரசியல் நோக்கத்துக்காகக் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம்.

விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவென அரசால், புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களைக் கையளித்துள்ளோம். இதேபோன்று காணிகளைக் உரிமை கோரும் நபர்களும் தமது காணிகள்தான் என்பதற்கான ஆவணங்களைக் கையளித்துள்ளனர்.

இந்த விவாகரத்தில் இது ஒரு சட்டவிரோத செயல் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டால் அதனையும் ஏற்க நான் தயார். விகாரை காணி விடுவிப்பு தொடர்பில் இதுவரை யாரும் என்னுடன் பேசவில்லை.

அரச குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு மதிப்பளித்து விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ளமாட்டோம்." – என்றார்.

## தையிட்டி திஸ்ஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்ட அழைப்பை விடுத்தனர்.

அங்கு அவர்கள் தெரிவிக்கையில்,

"தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையானது 18 பேருக்கு சொந்தமானகாணி.இந்தப்பகுதிஉயர்பாதுகாப்பு வலயமாக இருந்தபோது யாருக்கும் தெரியாமல் கட்டப்பட்ட இந்த விகாரைக்கு எதிராக சுமார் 3 வருட காலமாக ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் எனக் கூறும் இந்த அநுர அரசாங்கம் இந்தக் காணிகளை விடுவிப்பதில் இரட்டை வேடம் போடுகின்றது. நாங்கள் இந்த ஆட்சியில் மட்டுமல்ல கடந்த அரசுகளின் காலத்திலும் இந்தக் காணி தனியாருடைய காணி என்பதற்கான சகல ஆதாரங்களையும் சமர்ப்பித்து விடுவிக்குமாறு கோரிய நிலையில் தற்போதைய அமைச்சர் சந்திரசேகர் உறுதிகளை ஆராய வேண்டும் எனக் கூறுகின்றார்.

நீங்கள் எங்களின் உறுதிகளை ஆராயாமல் காணி தரவேண்டாம். எங்கள் உறுதிகள் அனைத்தும் 1912ஆம் ஆண்டு முதல் முறையாக இருந்தமைக்கான பதிவுகள் அனைத்தும் எம்மிடமும் திணைக்களங்களிடமும் இருக்கின்றன – ஆராயுங்கள். எதிர்வரும் 3ஆம் திகதி திஸ்ஸ விகாரைக்கு மீண்டும் ஒரு புத்தர் சிலையை கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அன்றைய தினம் போராட்டம் நடைபெறவுள்ளது.

காணிகளை மீட்பதற்கான எமது போராட்டம் சைக்கிள் கட்சியின் போராட்டமல்ல. எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை கட்டப்பட்டமைக்கு எதிராக அனைத்து கட்சியினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால், எம்மோடு இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க அவர்களே முன் வந்தார்கள். நாங்கள் யாரையும் குறை கூறுவதற்காக கூறவில்லை. எமது போராட்டம் எமக்கானதாக மட்டும் நினைத்து விட வேண்டாம்.

இன்று தையிட்டி மக்களின் காணிகளில் எப்படி விகாரை அமைக்கப்பட்டதோ அவ்வாறே நாளை உங்களுடைய காணிகளிலும் விகாரை அமைக்கப்படும். கேட்டால் இது பௌத்த சிங்கள நாடு என்று கூறுவார்கள். தற்போது வவுனியாவில் புதிதாக புத்தர் சிலை முளைக்கின்றது. இதேபோல் உங்கள் வீடுகளின் பின்புறமும் புத்த விகாரைகளை அமைப்பார்கள். நாங்கள் கேள்வி கேட்க முடியாதவர்களாக தொடர்ந்து ஆளாக்கப்படுவோம்.

நயினாதீவு விகாராதிபதி எமது நியாயமான போராட்டத்தை ஆதரித்துள்ள நிலையில் எங்களில் சிலர் கேட்கின்றார்கள் விகாரை கட்டும் வரை எங்கிருந்தீர்கள் என்று. அவர்களிடம் நாம் தெரிவிப்பது ஒன்றே விகாரை கட்டும்போது எமக்குத் தெரியாது. கட்டப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராடி வரும் நிலையில் மூன்று புதிய கட்டடங்களை விகாரைக்குள் கட்டி விட்டார்கள் தடுக்க முடிந்ததா?" – என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஐஸ் வலையில் நாடு

பொதுவாக இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் போதைப்பொருள் பாவனை என்ற அரக்கனின் பிடி இறுகி வருகின்றமை துலாம்பரமான உண்மை. பெரும் எண்ணிக்கையானோர் போதை பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றார்கள் என்ற செய்திகள் வெளியாகிய வண்ணமுள்ளன. பெரும்பாலும் பதின்ம வயதுச் சிறுவர்களும் இளைஞர்களும் இந்தப் போதைப்பொருள் வலைக்குள் விழுந்து வருகிறார்கள்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை பொறுத்தவரை, யுத்தம் முடிவடையும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் மது போதைப் பாவனை ஆங்காங்கே இருந்தாலும், ஏனைய மோசமான போதைப்பொருள்களின் பாவனை கிஞ்சித்து கூட இருக்கவில்லை. ஆனால் நிலைமை இப்போது தலைகீழாகி வருகிறது.

இலங்கையில் ஐஸ் எனும் கொடிய போதைப் பொருளைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் மட்டும் ஐஸ் போதைக்கு அடிமையான அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் அதன் உதவி இயக்குநர் தமரா தர்ஷன தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி மாவட்டங்களில் போதைப்பொருள் பயன்பாடு அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

“கடந்த சில ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட புள்ளி விவரங்களின்படி மெத்தம்பேட்டமைன் எனப்படும் ஐஸ் போதைப்பொருளின் படிப்படியான அதிகரிப்பை அடையாளம் காண முடியும். கஞ்சா தொடர்பாகவும் ஒரு குறிப்பிட்ட போக்கை அடையாளம் காணலாம். இருப்பினும், ஹெராயின் மற்றும் கஞ்சா எனப்படும்இரண்டு போதைப் பொருள்களுடன் ஒப்பிடும் போது, ஐஸ்போதைப்பொருளின் பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகிறது. இலங்கையில் போதைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்களில் சுமார் 99 சதவீதம் பேர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வகை போதை மருந்துகளை உட்கொள்கின்றனர். 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் போதைப் பொருள் பயன்படுத்துவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர் என்பது இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.” - என்று அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆக, நாடு இப்போது ஐஸ் வலைக்குள் சிக்கி வருகின்றது என்பதுதான் பீதி தரும் உண்மையாகும்.



# ஐ.தே.க. தலைவர்கள் நேற்று சஜித் பிரேமதாஸவுடன் பேச்சு

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம், முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திசாநாயக்க ஆகியோருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் நேற்று மதியம் கொழும்பில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் குறித்தே இரு தரப்பினரும் பேசினர் எனத் தெரிகின்றது.

ஷஇச்சந்திப்பு குறித்து தனது எக்ஸ் தளத்தில் ஒரு பதிவையிட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எமது தாய்நாடு எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தேசிய இலக்குகளை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் நிறைவேற்ற புதுமையான கொள்கை நடவடிக்கைகளை வகுப்பதன் முக்கியத்துவம் குறித்து பயனுள்ள மற்றும் நேர்மறையான கலந்துரையாடல்கள் நடைபெற்றன எனத் தெரிவித்திருந்தார்.

# சவூதியின் ஜித்தாவுக்கான கௌன்ஸல் ஜெனரலாக முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்பு

## முடிவை மீள்பரிசீலனை செய்யக் கோருகிறது ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி

(நூருல் ஹுதா உமர்)

சவூதி அரேபியாவின் ஜித்தா நகரிற்கான இலங்கை கௌன்ஸல் ஜெனரலாக முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிக்கும் அரசின் நடவடிக்கை உடனடியாக மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜித்தா நகரிற்கான கௌன்ஸல் ஜெனரலின் கடமைகள், வழக்கமான இராஜதந்திர பணிகளுக்கு அப்பால், ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரைகளுக்காக சவூதி அரேபியா பயணிக்கும் இலங்கை முஸ்லிம்களின் நலன்களை ஒருங்கிணைப்பதும், மேற்பார்வை செய்வதும், புனிதப் பிரதேசங்களுக்குள் பிரவேசித்து தேவையான பணிகளை முன்னெடுப்பதும் ஆகும். இத்தகைய மத, கலாசார உணர்வுகளுடன் நேரடியாக தொடர்புடைய பொறுப்புகள் குறித்த நுண்ணுணர்வு இப்பதவிக்கு அத்தியாவசியமானதாகும்.

ஹஜ் மற்றும் உம்ரா யாத்திரிகர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கில், 1998 ஆம் ஆண்டு அன்றைய அரச தலைவரின் உத்தரவின் பேரில் ஜித்தாவில் கௌன்ஸல் ஜெனரல் அலுவலகம் நிறுவப்பட்டது. அதன் முதலாவது கௌன்ஸல் ஜெனரலாக பிற்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி அலீ ஸப்ரி நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து பல முஸ்லிம் அதிகாரிகள் இப்பதவியை வகித்துள்ளனர். இது ஒரு தனிப்பட்ட நடைமுறை அல்ல் மத, கலாசார உணர்வுகளை மதிக்கும் ஓர் இராஜதந்திர மரபாகவே இதுவரை பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

ஏற்கனவே நுரைச்சோலை வீடமைப்பு பகிர்ந்தளித்து விடயத்திலும் அதிருப்தி நிலைப்பாட்டை கொண்டுள்ள அரேபிய தலைவர்களுக்கு தற்போது வெற்றிடமாக உள்ள இப்பதவிக்காக மரபிற்கு மாற்றமாக முஸ்லிம் அல்லாத ஒருவரை நியமிப்பது மேலும் எமது நாட்டு ஜனநாயகம் பற்றிய பிழையான எண்ணங்களை தோற்றுவிக்கும். இந்த செயலானது முஸ்லிங்களுக்கு மட்டுமல்ல நாட்டை நேசிக்கும் இலங்கையர்களுக்கும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. இந்த இராஜதந்திர மரபை மீறும் நடவடிக்கை, இலங்கை – சவூதி அரேபியா இருதரப்பு நட்புறவிலும், குறிப்பாக இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மனநிலையிலும் தேவையற்ற கலங்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாகவும் எங்களது கட்சி சுட்டிக் காட்டுகிறது.

அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி கூட இல்லாத தற்போதைய சூழலில், இவ்வாறான நுண்ணிய விடயங்களை அந்த மட்டத்தில் எடுத்துச் சொல்லி தெளிவுபடுத்தும் வாய்ப்பு இல்லாமல் இருப்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். அரசியல் ரீதியாகவும், இன ரீதியாகவும் முஸ்லிம் சமூகத்தினர் தமது சமய, கலாசார உரிமைகள் மற்றும் உணர்வுகளை மலினப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றே விரும்புகிறார்கள். ஹஜ் – உம்ரா யாத்திரைகளுடன் நேரடியாக தொடர்புடைய ஜித்தா கௌன்ஸல் ஜெனரல் பதவியில் மத, கலாசார உணர்வுகளை புரிந்து செயல்படக்கூடிய ஒருவரை நியமிப்பதே பொருத்தமானதாகும்.

எனவே, இந்த விடயத்தை உடனடியாக அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி கவனத்திற்கு கொண்டு சென்று, உரிய தீர்மானத்தை துரிதமாக மேற்கொள்ளுமாறும் இப்படியான விடயங்களில் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது. – என்று உள்ளது.





# கிராம சேவையாளர் அலுவலகங்கள் மக்கள் நேய நிலையங்களாக மாறும்

## முல்லைத்தீவில் விசேட கலந்துரையாடல்

(பா.சதீசன்)

“ஸ்மார்ட் கிராம அலுவலர் திட்டத்தின்கீழ் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களைப் பொதுமக்கள் நேய நிலையங்களாக மாற்றுதல்” எனும் தொனிப்பொருளிலான கிராம சேவை உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நேற்றையதினம் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களை வினைத்திறனான பொதுமக்கள் நேய நிலையங்களாக மாற்றுவதற்கு அவசியமான முறைமையை உருவாக்குதல், பௌதீக வளங்களின் தேவைப்பாடுகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் என்பன தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இச் செயற்பாடுகளினை ஒருங்கிணைப்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்திலும் நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகதத்தர் உள்ளடக்கிய உப குழுவும் அமைக்கப்பட்டது.

அத்துடன் கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது கிராம சேவை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மற்றும் நிவாரண கொடுப்பனவுகள் புனர்நிர்மாணப் பணிகள் எதிர்கால அனர்த்தங்களின் போதான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் மற்றும் சமூக நலக் கொடுப்பனவு, சமுக உட்கட்டமைப்பு, பொருளாதார உட்கட்டமைப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட செயலாளர்கள், பிரதம கணக்காளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அசுவசுமா மாவட்ட இணைப்பாளர், மாவட்ட புள்ளி விவரவியலாளர், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் , காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகதத்தர், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் என்பவர்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.











# மன்னாரில் மக்கள் சந்திப்புக்களில் ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் மாவட்டத்தின் இருவேறு இடங்களில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று மக்கள் குறைகேள் சந்திப்புக்களை நடாத்தினார்.

முத்தரிப்புத்துறையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திலும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்திலும் ரவிகரனால் மக்கள் குறைகேள் சந்திப்புக்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சந்திப்புக்களில் மக்கள் பலரும் கலந்துகொண்டு தமது கோரிக்கைகளையும், குறைபாடுகளையும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைத்தனர்.

இந்தச் சந்திப்புக்களின்போது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மன்னார் மாவட்டக்கிளைப் பிரமுகர்கள், நகரசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# ஒரு மில்லியன் மூலிகைகளை நடும் திட்டம் கிழக்கில் ஆரம்பித்து வைப்பு



(எஸ்.கீதபொன்கலன்)

ஒரு மில்லியன் மூலிகைகளை நட்டு ஒரு லட்சம் கிலோ மூலிகைகளை சேகரிக்கும் பிரசாரத்தின் கிழக்கு மாகாண தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

'மூலிகைகளை நடுவோம் – தேசத்தை உயர்த்துவோம்!' என்ற தொனிப் பொருளில் ஒசு சவிய தேசிய திட்டமாக இது முன்னெடுக்கப்படுகின்றது.

திருகோணமலை சம்பூர் விதுர கடற்படை முகாமிலும். மட்டக்களப்பில் வாழைச்சேனை காகித தொழிற்சாலை வளாகத்திலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, ஒசு சவிய தேசிய அமைப்பாளர் வழக்கறிஞர் சமந்த கோரலேராச்சி, மாகாண ஆயுர்வேத ஆணையாளர் டாக்டர் எம்.ஏ. நஃபீல் மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.




# பூஸ்ஸ அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தொலைபேசி உபகரணங்கள் கண்டுபிடிப்பு

பூஸ்ஸ அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் மேலும் சில தொலைபேசி உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் சிறைச்சாலை திடீர் நடவடிக்கை மற்றும் தந்திரோபாய பிரிவு அதிகாரிகள் இணைந்து இந்த தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கவர்கள் அகற்றப்பட்ட 02 தொலைபேசி சார்ஜர்கள், Handsfree மற்றும் Data cable ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த நாள்களிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்வாறான பல்வேறு உபகரணங்கள் அதன்போது கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பலாங்கொடை வர்த்தக நிலைய முகாமையாளரின் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வு விசாரணை




அம்பலாங்கொடை வர்த்தக நிலையமொன்றின் முகாமையாளர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான அடுத்தகட்ட விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மாஅதிபரின் உத்தரவிற்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை 09 சந்தேநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் கண்டி – அம்பிட்டிய விலுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனுக்கு சொந்தமான வீட்டில் தங்கியிருந்தமை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இந்த வீட்டின் கூரையைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் சந்தேகநபர்களுக்கு வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் ஒப்பந்ததாரருடன் பல தடவைகள் அந்த வீட்டிற்கு சென்றிருந்தனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு பின்னரும் சந்தேகநபர்கள் அம்பிட்டியவிலுள்ள அந்த வீட்டிற்கு சென்றுள்ளமை விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிப்பதற்கு கால அவகாசம் மேலும் ஒரு மாதத்தினால் நீடிப்பு

துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் மேலும் ஒரு மாதத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, அனுமதிப்பத்திரங்களை எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதி வரை புதுப்பித்துக்கொள்ள முடியும்.

துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வைத்துள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் இந்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.



நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



# மருந்துகளை பரிசோதிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பமானது

வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களுக்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர் மருந்துகளின் தரத்தைப் பரிசோதிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிடம் காணப்படும் ஆய்வு கூடங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதியமைச்சர் ஹங்சக விஜயமுனி தெரிவித்தார்.

மருந்துகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்யும் போது மாதிரிகளை பரிசோதித்து அவற்றின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகள் காணப்படுகின்றன. எனினும் இந்த மருந்துகள் நாட்டின் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பின்னர் அவற்றின் மாதிரிகளைப் பரிசோதிக்கும் நடைமுறை இதுவரை காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 1500 வகையான மருந்துகள் ஒரு லட்சம் வரையான வர்த்தகப் பெயர்களில் நாட்டின் மருந்தகங்களில் உள்ளமை இதில் காணப்படும் சிக்கலாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களுக்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர் அவற்றின் தரத்தை உறுதி செய்யும் வகையில், இந்த மருந்துகளின் மாதிரிகளைப் பெற்று அரசாங்கத்தின் பல்வேறு ஆய்வுகூடங்களின் ஊடாக அவற்றின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதியமைச்சர் ஹங்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

# கொழும்பு நகரை அண்மித்து விசேட போக்குவரத்து திட்டம்



கொழும்பு நகரை அண்மித்து விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு கடமைகளுக்காக 1,200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.


போக்குவரத்து நெரிசலை குறைத்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விசேட வாகனப் போக்குவரத்து திட்டம் மற்றும் பாதுகாப்பு திட்டத்தை செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

கொழும்பு – கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித்தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் கறுவாத்தோட்டம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் அதிக வாகன நெரிசல் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்த பொலிஸ் பிரிவுகளில் இன்று வழக்கம் போல போக்குவரத்து முன்னெடுக்கப்படுவதுடன், அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தேவைக்கேற்ப போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

கொழும்பில் நடைபாதைகளிலும் பிரதான வீதிகளிலும் இடையூறு ஏற்படும் வகையில் எந்தவொரு வாகனங்களையும் நிறுத்துவதற்கு இடமளிக்கப்படாதெனவும் அவ்வாறு போக்குவரத்து சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கை மக்களுக்கு ஒரு மில்லியன் யுவான் நிதி உதவி வழங்கும் சீன கொம்யூனிஸ்ட் கட்சி



இலங்கை மக்களுக்கு நிவாரண உதவியாக ஒரு மில்லியன் யுவான் நிதியுதவி வழங்கப்படும் என சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் சர்வதேச திணைக்களத்தினால் இந்த நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிதியுதவியானது இலங்கை மக்கள் மீது சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி கொண்டுள்ள அன்பு மற்றும் அக்கறையின் வெளிப்பாடாக அமைந்துள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# விமான நிலையத்தில் தானியங்கி நுழைவாயில்கள் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது



கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வசதிகளை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் நோக்கில்,வெளியேறும் முனையத்தில் புதிய தானியங்கி நுழைவாயில்களை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

,ந்த திட்டம் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு மற்றும் ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படுகிறது.

ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1,170 மில்லியன் யென் மானிய உதவியின் கீழ் இப்பணிகள் இடம்பெறுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான எல்லைகள் சார்ந்த தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னாயத்த வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இது ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி விமான நிலையத்தின் வருகை முனையத்தில் ஏற்கனவே 04 தானியங்கி நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் ஊடாக பயணிகளை அனுமதிக்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

வருகை மற்றும் வெளியேறு முனையங்கள் இரண்டிலும் ஒரே மாதிரியான தானியங்கி முறையை பின்பற்றுவதன் மூலம், பயணிகளைச் சோதனையிடும் நடவடிக்கைகளில் அதிக துல்லியம் மற்றும் வேகத்தை உறுதிப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு இணங்க, 2026ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அத்தியாவசிய மருந்து கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது



நாட்டின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, 2026ஆம் ஆண்டிற்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்திற்கு அமைச்சரவை தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான விருப்பக் கோரல்கள் மற்றும் முன்மொழிவுகளைக் கோருவதற்கு 2025 ஜூலை 21 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முதலில் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அழைப்பிற்கு இணங்க, 48 நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தன.

உயர்மட்ட நிலையான கொள்முதல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அன்பளிப்பாகப் பெறப்படுகின்ற பேரீச்சம்பழங்களுக்கு வரிச் சலுகை

புனித ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக அன்பளிப்பாகப் பெறப்படும் பேரீச்சம்பழங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தூதரகங்கள், அமைப்புகள் மற்றும் தனிநபர்களிடமிருந்து ஆண்டுதோறும் அன்பளிப்பாக அல்லது நன்கொடையாகப் பெறப்படும் பேரீச்சம்பழங்களுக்கு இந்தச் சலுகை பொருந்தும்.

இவ்வாறான இறக்குமதிகள் வெளிநாட்டுச் செலாவணி அடிப்படையிலன்றி மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டு ரமழான் நோன்பு காலம் 2026 பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பித்து, மார்ச் 21 ஆம் திகதி வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை தனது பூரண அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.











# நாட்டின் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையே அனர்த்தத்தை எதிர்கொள்ள பலமாக அமைந்தது

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

பொருளாதார நிலைபேற்றுத் தன்மையே, நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையை எதிர்கொள்வதற்கு பலமாக அமைந்தது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2025ஆம் ஆண்டு எதிர்பார்த்த வருமான இலக்கை அடைந்து, நாட்டில் பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை உருவாக்குவதற்கு தற்போது அரசாங்கத்தால் முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 2022ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொருளாதார வீழ்ச்சிக்கு, நாட்டுக்குத் தேவையான வருமானம் ஈட்டப்படாமை மற்றும் நாட்டுக்கு அவசியமான டொலர்கள் கிடைக்காமை ஆகியவையே காரணமாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையிலும் அரசின் இருப்பு தொடர்பான பொறுப்பை இனங்கண்டு அதன் செயல்பாடுகளைப் பேணவேண்டியதன் அவசியத்தையும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், புதிய திட்டங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி, 2026ஆம் ஆண்டில் நாட்டை பொருளாதார ரீதியில் வெற்றிக்கு இட்டுச்செல்ல அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.









# ரஷ்ய ஜனாதிபதி புடினின் இல்லம் மீதான தாக்குதல் முயற்சி குறித்து மோடி கவலை

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இல்லம் மீது உக்ரைன் படைகள் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் நிலையில், அது குறித்து பிரதமர் மோடி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வர தூதரக முயற்சிகளை தொடருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"ரஷ்ய ஜனாதிபதியின் இல்லம் குறிவைக்கப்பட்டதாக வரும் செய்திகள் குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். பகைமையை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை அடைய தற்போதைய தூதரக முயற்சிகளே மிகவும் சாத்தியமான வழி. எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் இந்த முயற்சிகளில் கவனம் செலுத்துமாறும் அவற்றை பலவீனப்படுத்தும் எந்த ஒரு நடவடிக்கையையும் தவிர்க்குமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் மேற்கே உள்ள நோவாகோரோட் பகுதியில் புடினின் வீடு உள்ளது. இதைத் தன் உக்ரைன் தொலைதூரம் சென்று தாக்கவல்ல ட்ரோன்களை ஏவி தாக்கியுள்ளதாக ரஷ்யா குற்றஞ்சாட்டுகிறது. புடினின் வீட்டைக் குறிவைத்து 91 ட்ரோன்கள் ஏவப்பட்டன என ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுக்கும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி,

"அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குழுவின் போர் நிறுத்த முயற்சியைக் குலைக்கவே ரஷ்யா இப்படிச் செய்கிறது. புடின் வீட்டின் மீதான தாக்குதல் என்பது புனைவுக் கதை. போர் நிறுத்தத்தைத் தடுக்கும் ரஷ்யாவின் முயற்சி. இன்னும் சொல்லப்போனால், இது ரஷ்யாவின் வழக்கமான பொய்.

ரஷ்யா கீவ் நகர் மீதும், அமைச்சரவை மீதும் ஏற்கெனவே தாக்குதல் நடத்தி உள்ளது. ஆனால், பதில் தாக்குதல் நடத்தினால், போர் நிறுத்த முயற்சி பாதிக்கப்படும் என்று உக்ரைன் எதுவுமே செய்யவில்லை." என்று கூறியுள்ளார்.

# கும்பகோணம் தாராசுரம் கோயிலில் அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தரிசனம்



கும்பகோணம் வட்டம் தாராசுரத்தில் 2 ஆம் ராஜராஜசோழனால் கட்டப்பட்ட, அடிக்கு 1008 சிற்பங்கள் உடைய ஐராவதீஸ்வரர் கோயிலில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அவரது மனைவி சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

தொல்லியல் துறையினர் கட்டுப்பாட்டில் உள்ள இந்தக் கோயிலில் உள்ள மூலவரை தரிசனம் செய்த அவர்கள் கோயிலைச் சுற்றி உள்ள கலைநயத்துடன் நுணுக்கம் மிகுந்த சிற்பங்களை பார்வையிட்டு அதன் விளக்கத்தை கேட்டறிந்தனர். பின்னர் கோயில் வெளி பிரகாரத்தில் மழைக்காலங்களில் நீர் தேங்கக் கூடிய பகுதியை பார்வையிட்டார்.

அப்போது தொல்லியல் துறை அதிகாரிகள் மழை நீர் தேங்காதவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

இதையடுத்து சுவாமிமலை சுவாமிநாத கோயிலில் தரிசனம் மேற்கொண்ட அவர் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் செல்லவுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழக அரசின் பொறுப்பின்மையை திருத்தணி சம்பவம் காட்டுகின்றது

## விஜய் விமர்சனம்



இளைஞர்கள் எக்கேடு கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே திருத்தணி சம்பவம் எடுத்துக் காட்டுகிறது என த.வெ.க. தலைவர் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

“சென்னையிலிருந்து திருத்தணி சென்ற ரயிலில் இளைஞர்கள் சிலர், மற்றொரு இளைஞரைக் கொடூரமாகத் தாக்கிய சம்பவம், தமிழகம் எத்தகைய அபாயகரமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்ற அச்சத்தையும் அதிர்வலைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது.

இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை அரசு முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கவில்லை. இளைஞர்கள் எக்கேடும் கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

சட்டம் – ஒழுங்கு சீர்கெட்டு, போதைப் பொருள்களால் இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் இல்லை. இளைஞர்கள் நல்ல முறையில் கல்வி கற்க, ஏற்ற சூழல் இல்லை. தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் இல்லை.

புத்தாக்கம் இல்லை. புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் இல்லை. இவை எவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காமல், யாருக்காக இந்த ஆட்சியை நடத்துகிறீர்கள்?

எஞ்சியிருக்கக் கூடிய ஆட்சிக் காலத்திலாவது போதைப் பொருட்கள் புழக்கத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கபட நாடக அரசை வலியுறுத்துகிறேன்.” என்று அவர் தெரிவித்துள்ளார்.



# உடனடியாக ஆயுதங்களை கைவிட வேண்டும்: ஹமாஸுக்கு டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை



காசா பகுதியில் அமைதி திரும்ப வேண்டுமானால் ஹமாஸ் அமைப்பு உடனடியாக ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்க்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் இடையிலான சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் ”அவர்களுக்கு ஆயுதங்களை கைவிட மிகக் குறுகிய கால அவகாசம் மட்டுமே வழங்கப்படுகிறது.

அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது” என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜுன் மாத தாக்குதல்களுக்குப் பின்னர் ஈரான் தனது ஆயுதங்களை மீண்டும் உருவாக்கி வருவதாக தகவல்கள் வந்துள்ளதாக அவர் கூறினார்.

அவ்வாறு ஈரான் மீண்டும் ஆயுதங்களை உற்பத்தி செய்தால் அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை நடத்தும் என்பதையும் அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இஸ்ரேலின் மிக உயர்ந்த குடிமகன் விருதான இஸ்ரேல் பரிசை ட்ரம்பிற்கு வழங்குவதாக அறிவித்தார்,

மேலும் இது இஸ்ரேலியர் அல்லாத ஒருவருக்கு வழங்கப்படுவது இதுவே முதல் முறை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பங்களாதேஷில் மேலும் ஓர் இந்து நபர் சுட்டுக் கொலை

## சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்து அச்சம்

தீபு தாஸ் மற்றும் அம்ரித் மொண்டலுக்குப் பிறகு, பங்களாதேஷில் இஸ்லாமிய கும்பலால் மற்றொரு இந்துவான பஜேந்திர பிஸ்வாஸ் என்பவர் கொல்லப்பட்டார். இந்தக் கொலை பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்து அச்சத்தை எழுப்பியுள்ளது.

பங்களாதேஷ் மாணவர் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டில் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், பங்களாதேஷின் மைமன்சிங் மாவட்டத்தில் உள்ள ஓர் ஆடைத் தொழிற்சாலையில் பாதுகாப்புப் பணியாளராகப் பணிபுரிந்த ஓர் இந்து ஊழியர் பஜேந்திர பிஸ்வாஸ் (வயது 42), சக ஊழியரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் திங்கள் கிழமை மாலை 6.45 மணியளவில், பலுகா உபஜிலா பகுதியில் அமைந்துள்ள லபிப் குழுமத்திற்குச் சொந்தமான சுல்தானா ஸ்வெட்டர்ஸ் லிமிடெட் தொழிற்சாலையில் நடந்தது.

இந்தக் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட நோமான் மியா (வயது 29) என்பவரும் அதே பிரிவில் பணிபுரிந்து வந்தார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறைகளுக்குப் பின்னர் முதலாவதாக மைமன்சிங்கில் இந்து இளைஞரான தீபு சந்திர தாஸை ஒரு கும்பல் அடித்துக் கொன்றது. இதனை தொடர்ந்து இரண்டாவதாக ராஜ்பாரியின்பாங்ஷாமாவட்டத்தில்கிறிஸ்துமஸ் அன்று இந்து இளைஞரான அம்ரித் மொண்டல் கொல்லப்பட்டார். ஆனால், மொண்டலின் கொலை மத ரீதியான தாக்குதல் அல்ல, மாறாக மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையது என்று பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டனர். இந்த கொலைகள் தொடர்பாக இதுவரை 12 பேரைக் கைது செய்துள்ளன.

தீபு சந்திர தாஸின் கொலை, டாக்கா மற்றும் பங்களாதேஷில் உள்ள பிற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடையே பரவலான போராட்டங்களைத் தூண்டியது. இந்த கொலைக்காக இந்தியாவும் தனது கவலைகளைத் தெரிவித்தது.

இதனை தொடர்ந்து வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா,

“முகம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எதிராக சொல்ல முடியாத அட்டூழியங்களைச் செய்கிறது. மதச் சிறுபான்மையினரை உயிருடன் எரிப்பது போன்ற கொடூரமான முன்னுதாரணங்களை ஏற்படுத்துகின்றனர்.” என குற்றம் சாட்டினார்.



# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2025




இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும். சகபணியாளர்களும் தரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்று வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சிக்கல்களில் சிக்காமல் இருக்க இன்று உங்கள் செயல்களில் பொறுமை தேவை.இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

உங்கள் சக பணியாளர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். இதனால் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் தடைகள் இருக்கும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்கையில் கவனம் தேவை. எரிச்சலூட்டும் நடத்தை அல்லது கடுமையான வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதிக உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாளாக இருக்காது. என்றாலும் உங்கள் கடின முயற்சி மூலம் உங்கள் திறமைகளை நிரூபிக்கலாம். தடைகளைக் கண்டு லட்சியத்திலிருந்து விலகாதீர்கள்.

பணியில் தவறுகள் நேரலாம். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிறிது கவனமுடன் இருக்கவும்.

உங்கள் துணையுடன் கடுமையாகப் பேசுவீர்கள் அல்லது வன்மையுடன் நடந்து கொள்வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியை கெடுக்கும்.எனவே இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக நீரைப் பருகவும்.




இன்று வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். என்றாலும் முடிவெடுக்கும் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் எளிதாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். ஊக்கத்தொகையாக பண வரவு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு திருப்திகரமாகவும் போதுமானதாகவும் இருக்கும்.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




தகவல் பரிமாற்றங்களை கவனமாகக் கையாள வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும்.

சில பணிகள் குறித்தநேரத்தில் முடியாது. உங்கள் நேரத்தை பயனுள்ளதாக ஆக்க திறமை தேவை.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் அமைதியின்மை ஏற்படும்.

நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்காது. அதிக செலவினங்கள் காணப்படும்.

பல் வலிக்கான சாத்தியம் உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்ள வேண்டும்.




தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணியில் அதிக கவனம் தேவை. பொறுப்புகளின் காரணமாக இன்று பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நட்பான அணுகுமுறை சிறந்தது.

செலவுகள் அதிகமாக இருக்கும். நிதிநிலையில் சமநிலையைப் பராமரிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




எங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த இலட்சியத்தைக் கொள்ள வேண்டும்.

உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்காது. இது உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறந்த முறையில் பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நடக்க வாய்ப்புள்ளது. நீங்கள் இருவரும் மற்றவர்களின் தேவையை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படாது. செலவுகள் அதிகமாக காணப்படும்.

கால் வலியால் அவதிப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி உங்கள் ஆரோக்கியத்துக்கு நல்லது.




தைரியத்துடனும் உறுதியுடனும் முன்னேறுவீர்கள். இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க போதுமான வாய்ப்புகள் காணப்படும். உங்களுக்கு கொடுத்த வேலையை குறித்தநேரத்திற்குள் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருப்பதன் காரணமாக உங்களின் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2025




இன்று அனுகூலமான நாள். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இருவருக்குமிடையே மகிழ்ச்சி காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் தடையாக இருக்காது.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். மனதில் குழப்பம் இருக்கும் என்பதால் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியைப் பராமரிக்க வேண்டும்.

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

சளி, இருமல் அல்லது தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.




உங்கள் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். உங்கள் லட்சியங்களை அடைய நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். வாழ்வில் வரும் மாற்றங்களை நடைமுறைப்படுத்த தைரியமாக இருங்கள்.

உங்களது தற்போதைய பணியில் திருப்தியின்மை காணப்படும். மேலும் உங்கள் வளர்ச்சிக்காக பணி மாற்றம் விரும்புவீர்கள்.

உறவில் புரிந்துணர்வை பராமரிக்க உங்கள் துணையை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று குறைந்த அளவு பண வரவே காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக அதிகமாக செலவு செய்ய நேரும்.




உங்கள் முயற்சிகளில் நீங்கள் விரும்பும் பலன் கிடைக்கும். இன்று எதிர்பாராத சில நன்மைகள் உங்களுக்கு மகிழ்ச்சியை தரும்.

இன்று நீங்கள் விரைவாகப் பணியாற்றுவீர்கள்.அதையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை கழிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.



# நுரைச்சோலையில் தற்போது திருத்தப்பட்டு வரும் 2 மின் பிறப்பாக்கிகளும் ஜனவரியில் இயங்கும்

**(உடப்பு க.மகாதேவன்)**

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு மின் பிறப்பாக்கிகளும், ஜனவரி 14 மற்றும் ஜனவரி 18 ஆம் திகதிகளில் தேசிய மின் கட்டமைப்பில் மீண்டும் இணைக்கப்படவுள்ளன.

இலங்கை மின்சார சபை விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, 2 'பி' இலக்க மின் பிறப்பாக்கியை எதிர்வரும் 2026 ஜனவரி 14ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அந்தப் பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. உரிய தரப் பரிசோதனைகளுக்குப் பின்னர் அது தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படும் என மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, முதலாம் இலக்க மின் பிறப்பாக்கியின் கொதிகலனில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, அந்தப் பிறப்பாக்கி கடந்த 2025 டிசம்பர் 20 ஆம் திகதி பாதுகாப்பு கருதி நிறுத்தப்பட்டது.

தற்போது அதன் கோளாறுகளைச் சரிசெய்யும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதனை 2026 ஜனவரி 18 ஆம் திகதியளவில் மீண்டும் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தச் சூழல் நாட்டின் தொடர்ச்சியான மின்சார விநியோகத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் இலங்கை மின்சார சபை உறுதியளித்துள்ளது.